# விலங்கு நண்பர்கள்:
# புலி



## புலிகளைப் பற்றிக் அறிந்துகொள்வோம்:

1. வேட்டையாடுவதாலும் அவற்றின் இருப்பிடங்களான காடுகளை அழிப்பதாலும் புலிகளின் இனம் அச்சுறுத்தப்பட்டு வருகின்றன. இப்போது சுமார் 3000 புலிகள் மட்டுமே உள்ளன.

2. புலிகள் நீரில் நன்றாக நீந்தக் கூடியவை. இவை தனது இரையை நீரில் இறங்கித் தேடி வேட்டையாடும் ஆற்றல் கொண்டவை.

3. இவற்றுக்கு மனிதனை விட ஆறு மடங்கு தெளிவான கண்பார்வைத் திறன் இருப்பதால், இவை இரவிலும் வேட்டையாடுகின்றன.

4. முன்பெல்லாம் புலிகள் சிங்கப்பூரில் கண்டபடி திரிந்துவந்துள்ளன. கடைசியாக இப்படித் திரிந்த புலிகளில் ஒன்று 1930-இல் சுவா சூ காங் கிராமத்தில் சுட்டுக் கொல்லப்பட்டது.

5. வெள்ளைப் புலிகள் மிகவும் அரிதாகிவிட்டன. இதனை நீண்ட காலமாக யாரும் இதுவரை கண்டதில்லை.

குழந்தைகளுக்குப் பயன்படுத்துவதற்குரியவை

# எது புலிகளை வலிமையான வேட்டையாடும் மிருகமாக ஆக்குகிறது?

புலிகளின் பாதங்கள் மெத்தை போன்று மிருதுவாக இருப்பதால் இவை மெல்ல பதுங்கித் தன் இரையின் மீது பாய்ந்து பிடிக்க ஏதுவாக உள்ளது. இவை 10 மீட்டர் வரை பாய்ந்து செல்லும் தன்மை கொண்டவை.



# பார், நினை, சிந்தி கேள்விகள்

**‘பார்-நினை-சிந்தி’ என்ற உத்தியைப் பயன்படுத்தி உங்கள் குழந்தைகளுடன் ஓர் உரையாடலைத் தொடங்குங்கள். உங்கள் குழந்தைகள் தாமாகவே கேள்விகளை உருவாக்கச் செய்யுங்கள்!**

*Adapted from Project Zero, Harvard Graduate School of Education



## பார்:

- இப்படத்திலுள்ள நிறங்களைக் கண்டறிந்து கூறுக.
- புலியின் உடல்பாகங்களைக் கூறுக.
- ...நான் பார்க்கிறேன்.

## நினை:

- இந்தப் புலி அடுத்து என்ன செய்யும் என நீ நினைக்கிறாய்?
- இந்தப் புலி எதை நோக்கிச் செல்கிறது என நீ நினைக்கிறாய்?
- ...நான் நினைக்கிறேன்.

## சிந்தி:

- இந்தப் புலி எப்படி வேட்டையாடும் எனச் சிந்திக்கின்றேன்.
- ...எதனால் என நான் சிந்திக்கின்றேன்.
- ...என்ன எனச் சிந்திக்கின்றேன்.

# நடவடிக்கை 1:
# குணங்கள் / சொல்விளையாட்டு



குழு / தனிநபர் நடவடிக்கை     உதிரிப்பாகங்கள்

படி 1. வெவ்வேறு வடிவங்களிலுள்ள உதிரிப் பொருட்களை எடுத்துக்கொள்க. (எ-டு. வீட்டிலுள்ள அல்லது வகுப்பறையிலுள்ள குச்சிகள், இலைகள், பென்சில்கள், பொத்தான்கள், மறுசுழற்சிக்கான குடுவைகள் போன்றவை)

படி 2. இந்த உதிரிப் பொருட்களைக் கொண்டு 'பு-லி' என்ற சொல்லை வடிவமைக்கவும்.

கூடுதல் சவால்: புலியோடு தொடர்புடைய இதர சொற்களைக் கண்டறிந்து அவற்றை மேற்சொன்ன பாணியிலேயே சேகரித்து வைத்துள்ள பொருட்களைப் பயன்படுத்தி சொற்களை வடிவமைத்துக்காட்டுக.

# நடவடிக்கை 2:
# ஒரு புலியின் கதை



குழு நடவடிக்கை

மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்கள்,
கத்தரிக்கோல், நூல், பசை, பென்சில்
மற்றும் தாள்

**படி 1.** குறிப்பாக அதிலுள்ள வெள்ளைப் புலியின் முகத்தை நன்றாக உற்றுக் கவனிக்கவும்.

**படி 2.** சேகரித்து வைத்துள்ள மறுசுழற்சி செய்யப்பட்ட பொருட்களையும் இதரப் பொருட்களையும் வைத்துக்கொண்டு புலி முகமூடி ஒன்றைத் தயாரிக்கவும்.

**படி 3.** இந்த முகமூடியை அணிந்துகொண்டு நடிக்கும் வண்ணம் ஒரு கதையை உருவாக்கிப் பின் இம்முகமூடியை அணிந்துகொண்டே அக்கதையை நடித்துக் காட்டவும்.